
திருவாசகம் - 18
குயிற்பத்து கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

மாணிக்கவாசகர் தனது எண்ணங்களைப் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் வெளிப்படுத்துவார். விளையாட்டு மனதிற்கு மகிழ்வைத்தரும். தேவையில்லாத சிந்தனைகளை அகற்றும். கூடிவாழச் செய்யும். புரிந்துணர்வை உண்டாக்கும். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள் விளையாட்டின் மூலம் சைவநெறியைக் கூறுகிறார். குறிப்பாகச் சிவனின் மகிமைகளையும், பெருமைகளையும் கூறுகிறார். பெண்களூடாகச் சொல்வது மற்றவர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறார். அருமையான தத்துவங்களை மிக மிக இலகுவாக்கிக் கூறுவதால் தான் திருவாசகத்தைத் தேன் என்றனரோ தெரியவில்லை. திருவாசகத்தை வாசிப்போரின் தொகை மிகமிக அதிகரித்துள்ளமை மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நன்றி.

அன்புடன்
கே.வி.குணசேகரன்

உ

சிவமயம்

# குயிற்பத்து

## ஆத்ம இரக்கம்

## தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

**கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்**

**பாத மிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்**

**சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை**

**ஆதிகுண மொன்று மில்லான் அந்தமி லான்வரக் கூவாய் 01**

கவிதா கதிரேசனிடம் வந்து கேட்டான்; தாத்தா, நேற்று ஆச்சிரமத்தில் பிள்ளைகள். திருவாசகத்தில் வரும் குயிற்பாட்டை மிகவும் இனிமையாகப் பாடினர். நானும் அவர்களுடன் சேர்ந்து பாடினேன். மாணிக்கவாசக சுவாமியார் குயிலைப் பற்றி ஏன் பாடுகிறார்''?

கதிரேசன் சிரித்தார். பின்பு கவிதாவுடன் விளையாட வந்த ஆறு பெண் பிள்ளைகளையும் அழைத்துச் சொன்னார்; ''பிள்ளைகளே, ஞானிகள், முனிவர்கள், கவிஞர்கள் இறைவனின் பெருமையைத் தும்பி, குயில், கிளி முதலியவற்றிற்குச் சொல்வது போல மனிதர்களுக்குச் சொல்வார்கள். இது ஓர் இனிமையான முறை. குயிலின் குரல் மிக மிக இனிமையானது. அந்த இனிமையான குயில் சிவனது பெருமைகளை நான் சொல்லச் சொல்ல பாடு என்கிறார். இனிமையான குரலை உடைய குயிலே, சிவபெருமானின் பாதங்கள் இரண்டும் பாதாளம் ஏழிற்கும் அப்பாற்பட்டது. அவரின் மணி முடியானது. ஆகாயத்திற்கும் அப்பாற்பட்டது. அதைப் பிரமனும் விட்டுணுவும் தேடிக் காணாத கதை உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட சிவபெருமானுக்கு ஆதியும் அந்தமும் இல்லை. அதாவது அடியும் முடியும் காண முடியாதவை. சிவன் பிரபஞ்சமாகவும், புலன்களுக்கு அப்பாற்பட்டவனாகவும் இருப்பவன். அவனுக்கு அன்னியமானவை எவையும் இல்லை. எல்லாம் சிவத்துக்குள் உண்டு. அவனிடம் எதுவும் இல்லாததால் அவன் புலித்தோலை உடுத்திருக்கிறான். வீடு இல்லாததால் சுடலையில் வசிக்கிறான். உற்றார் உறவினர் இல்லாததால் பிச்சை

எடுத்து உண்கிறான். இருந்தபோதும் அவன் அடியார்கள் கேட்பதைக் கொடுப்பான். நீங்கள் கல்வியைக் கேட்டீர்கள் அதைத் தந்துள்ளான். நான் அன்பைக் கேட்டேன் அதைத் தந்துள்ளான். ஒரு பழத்தை எடுத்துப் பார்த்தால் அதில் தோல் இருக்கும், சதை இருக்கும், உள்ளே விதை இருக்கும், அதுபோல உலகம், உயிர்கள், கடவுள் மூன்றும் சிவத்துள் இருக்கும். நாம் யார் மீது அன்பு வைத்தாலும் அது சிவனைச் சென்றடையும். அதனால் தான் ஒருவர் மீது ஒருவர் அன்புள்ளவர்களாக வாழ வேண்டும் என்று பெரியவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த உலகமாக இருப்பவன் சிவன். உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் சிவனின் சொத்து. அதே நேரம் இந்த உலகிற்கு அப்பாற்பட்டவனாகவும், எல்லாப் பொருட்களோடும் கூடியும் இருப்பவன் சிவன். அவனுக்கு அன்னியமானது எதுவும் இல்லை என்று மாணிக்கவாசக சுவாமிகள் குயில்மூலமாக எமக்குச் சொல்கிறார்.

**ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய்**

**ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்**

**பேரருளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்**

**சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய் 02**

“தாத்தா, சிவபெருமான் எல்லாமாக இருப்பவர். எல்லாவற்றிற்கும் அப்பாலிருப்பவர். கேட்ட வரம் தருபவர்” என்றீர்கள் அப்படி நடக்குமா”? என்று கேட்டாள் கவிதா.

“கவிதா, யாரைவிட மேலானதும், வேறானதும் எதுவும் இல்லையோ, யாரைக்காட்டிலும் நுண்ணியதோ, பெரியதோ இல்லையோ அவர் தனிப்பெரும் பொருள். அவர் உறுதியானவர். மகிமை மிக்கவர். அந்தப் பொருளில் இருந்தே யாவும் உற்பத்தியாகின்றன. அதனால் தான் அவர் அடியவர்கள் விரும்புபவற்றைக் கொடுக்கிறார். அதனால்தான் மாணிக்கவாசக சுவாமிகளைக் கயிலைக்கு அழைத்து அவரைச் சிவனைப் போற்றிப் பாடச் சொல்கிறார். உயிர்கள் எல்லாம் இறைவனை ஏதோ ஒரு விதத்தில் துதிக்கின்றன. முதலாவதாகத் துதிப்பவர் இலங்கையின் அரசனான இராவணனின் மனைவி மண்டோதரி போன்று பெரும் நன்மையைப் பெறுவர். மண்டோதரி பெரும் சிவபக்தை. அவள் தனது கணவனான இராவணன் இன்னொருவனின் மனைவிமீது கொண்ட இச்சையை வெறுத்தவள். அதனால் அவனைத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்தவள். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் அவளைப்

போற்றுகிறார். ஒவ்வொருவரும் தமக்கு எது தேவையென்று நினைக்கிறார்களோ, அதைச் சிவனிடம் மெய்யன்போடு கேட்டால் அவர் தருவார். நீ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல விரும்பினாய். அதை அவர் தந்தவர் தானே. இவ்வாறு உன்னுடன் கூடி விளையாடும் தோழிகளைக் கேட்டுப்பார் அவர்கள் கேட்டதைச் சிவன் கொடுத்துள்ளான்" என்றார் கதிரேசன்.

**நீல வுருவிற் குயிலே நீள்மணி மாடம் நிலாவுங்**

**கோல அழகில் திகழுங் கொடிமங்கை உள்ளுறை கோயில்**

**சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோச மங்கை**

**ஞாலம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய். 03**

"கவிதா மாணிக்கவாசக சுவாமிகள், அழகான குயிலே நீ மணிமாடத்தில் நிலாவும் அழகிய திருமங்கையான உமாதேவியாருடன் சிவன் கோவில் கொண்டிருக்கும் உத்தரகோசமங்கை என்ற தலத்தையும், அங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானையும் போற்றிப் புகழ்ந்து பாடு" என்கிறார். சிவசக்தியின் அருள் இருக்குமிடமெல்லாம் அழகு நிறைந்த புனித இடங்கள் அந்த இடங்களில் சிவனும் அம்மையும் மகிழ்வுடன் வீற்றிருப்பதால் பக்தர்கள் கேட்ட வரத்தை மகிழ்வுடன் அருள்கின்றனர். எங்கு அழகு அதிகமாக இருக்கிறதோ அங்கு சிவனும் அம்மையும் மிக்க மகிழ்வுடன் இருப்பர். அதற்காகத் தான் நாம் ஆச்சிரமத்தை மிகவும் அழகாக வைத்திருக்கிறோம். மரச்சோலைகளும் பூச்செடிகளும் தான் அழகைக் கொடுப்பன. அதனால் கோவில் வளாகமெங்கும் மரங்களை நட்டுள்ளோம். அங்கு அழகான பறவைகள் வந்து குடியேறியுள்ளன. அவற்றின் அழகை ரசிக்கப் பிள்ளைகளும், மக்களும் வருகின்றனர். அழகான பூஞ்சோலை ஒன்றை உருவாக்கியுள்ளோம். அங்கு இல்லாத பூக்களே இல்லை. அதைப் பார்த்தால் மனம் குளிரும். அவ்வேளையில் வேறு நினைவுகள் வராது. இங்குள்ள சோலையில் உலாவும் மான்களும் மயில்களும், பக்தர்களின் மனதைப் பண்படுத்துகின்றன. வீரவாகுத் தாத்தாவை உங்களுக்குத் தெரியும் தானே. அவருக்குப் பிள்ளைகள் இல்லை. பெருந்துன்பப்பட்டார். அதைக் கண்ட நான் அவரை அழைத்து வந்து சோலையில் உள்ள மான், மயில், குரங்கு போன்றவற்றிற்கு அறிமுகம் செய்து வைத்தேன். இப்போ அவர் தனது பொழுதை அவற்றுடன் தான் விளையாடி மகிழ்கிறார். நான்கு குரங்குகள் இங்கு இருக்கின்றன. இரவு வேளையில் அவை அவருடன் வீட்டுக்குச் சென்றுவிடும். காலையில் அவருடன் வரும். காலையில் அவரின் வருகையை எல்லோரும் ஆவலோடு பார்த்திருப்பர். ஏனென்றால் அவர் அவற்றிற்கு உணவு கொண்டு

வருவார். விதம் விதமான உணவுகள் கொண்டு வந்து கொடுப்பதால் அவை அவரின் மீது உயிரையே வைத்திருக்கின்றன. அவரும் மிக்க மகிழ்வுடன் வாழ்கிறார். இது சிவனின் அருள் என்கிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கேட்பர். வீரவாகு அன்பைக் கேட்டார். அது இப்போது அவருக்கு அளவுக்கதிகமாகக் கிடைக்கிறது. அதனால் பூரிப்படைந்துள்ளார். இதற்குக் காரணம் சிவனும் உமையும் இங்கு மகிழ்வுடன் இருப்பதேயாகும். அவர்களுக்கு மகிழ்வைக் கொடுப்பது அழகு. அந்த அழகு ஆச்சிரமத்தில் நிறைய உண்டு. அதனால் நீங்களும் அழகாக இருங்கள். இருக்கும் இடத்தையும் அழகுபடுத்துங்கள்” என்றார் கதிரேசன்.

**தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலேயிது கேள்நீ வான்பழித்**

**திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல் ஊன்பழித்**

**துள்ளம் புகுந்தென் உணர்வது வாய வொருத்தன்**

**மான்பழித்தாண்டமெல்நோக்கி மணாளனை நீ வரக் கூவாய் 04**

“கவிதா தேனும் பழமும் நிறைந்துள்ள சோலையிலே வாழும் குயிலே, இப்பூவுலகில் வாழ்கின்ற மனிதர்களது உள்ளத்தில் புகுந்து உணர்வாகி ஆளும் மணாளனான சிவனின் புகழைப் பாடு என்று சொல்கிறார். அதன் அர்த்தம் என்னவென்றால் அதிதத்தில் இருக்கும் சிவன் அந்தர்யாமியாவது பக்தர்களின் உடல் உணர்வுகளை ஒழித்து உள்ளொளி பெருக்குவதற்காகவேயாகும். வீரவாகுத் தாத்தா ஒரு சிவபக்தர். அவர் மனைவி இறந்ததும் பெருந் துயரப்பட்டார். மனைவி இல்லாவிட்டால் வாழ்வு அழிந்துவிடுமென்பார்கள் . மிகவும் அன்போடு வாழ்ந்தவர்கள் அவர்கள் அதனால் அவர் குடித்தார். அளவுக்கதிகமாகக் குடித்து விட்டு வீதியில் படுத்துறங்க ஆரம்பித்தார். அதனால் அவரை ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்து புத்திமதிகள் சொல்லி அவரது மனதை மாற்ற முயற்சித்தோம். முடியவில்லை. பின் சோலையில் வளரும் பறவைகளையும் மிருகங்களையும் அவருடன் பழக விட்டோம். சிறிது காலத்தில் அவர் முற்றாக மாறிவிட்டார். அவை அவர் மீது செலுத்தும் அன்பை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் அவற்றிற்கு வேலை செய்யப் பழக்கினார். சாகச விளையாட்டுக்களை பழக்கினார். அவற்றின் விளையாட்டைப் பார்க்க மக்கள் கூடுவர். சிறார்களுக்கு அது பெரும் விருந்தாக அமைந்தது. வீட்டில் முடங்கிக் கிடந்த வீரவாகு இப்போது ஊர் முழுவதற்கும் கதாநாயகனானார். சிவன் அந்தர்யாமியாக உள்ளத்தில் இருப்பது அவர்களது உடல் உணர்வுகளை ஒழித்து உள்ளொளி பெருக்குவதற்காக. சிவம் என்பது அன்பு உள்ளத்தில் அந்தர்யாமியாக இறைவனைப் போலிருந்து

உள்ளத்தை எழுச்சியுறச் செய்யும் மகிழ்வுதான் சிவன் என்கிறோம். நாம் மனகிழ்ந்தால் சிவமும் மகிழும். இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திற்கும் அன்பு என்றால் என்னவென்று விளங்கும். பறவைகள் மிருகங்களுக்குத் தாய்மை உணர்வுண்டு. குட்டிகள் பாலுக்காக ஏங்கும் நேரம் அவற்றிற்குத் தெரியும். குரங்கு ஒன்று தெருவில் விடப்பட்ட நாயக்குட்டி ஒன்றைத் தூக்கிச் சென்று மரத்தில் வைத்துப் பாலூட்டியதைப் படம் பிடித்து ஒரு பத்திரிகை பிரசுரித்திருந்தது. உணர்வை எம்மாலும் புரிய முடியாது. பிறராலும் உணர்த்த முடியாது. அதுதான் அந்தர்யாமி என்ற நிலை" என்றார் கதிரேசன்.

**சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல**

**அந்தரத் தேறின் றிழிந்திங் கடியவ ராசை அறுப்பான்**

**முந்தும் நடுவும் முடிவு மாகிய மூவ ரறியாச்**

**சிந்தூரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய் 05**

"அழகான குயிலே, சிவனது அருள் பிரகாசமானது. அஞ்ஞான இருளில் உருவெடுத்த ஆசைகளை அழித்துச் சுத்தப்படுத்துகிறது. அதனால் அந்தச் சுந்தரனான சிவனது பெருமைகளைப் பாடு" என்கிறார் மாணிக்கவாசகர்.

"சிவம் என்பது அளவற்ற அன்பு. அதனால் தான் அன்பே சிவம் என்றார் திருமூலர். ஒருவர் மீது ஒருவர் வைக்கும் அன்பானது சிவனைச் சென்றடைவதால் அன்புதான் சிவம். மிகவும் விரக்தியுற்றநிலையில் ஆச்சிரமத்திற்கு வந்த வீரவாகு இன்று அன்பால் திளைத்திருக்கிறார். மிருகங்களும், பறவைகளும் அவரைச் சுற்றி நிற்கும். இப்போ அவர் வீட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. கோவிலின் வடக்குப் புறத்தில் நிற்கும் பெரிய வேப்பமரநிழலில் ஒரு கட்டிலைப்போட்டு இரவில் உறங்குவார். பறவைகளும், குரங்குகளும் வேப்பமரத்தில் உறங்குகின்றன. பசுக்களும், ஆடுகளும், மான்களும் நிலத்தில் உறங்குகின்றன. மான்களும், ஆடுகளும் அவர் கட்டிலில் படுத்தால் அவையும் ஏறிக் கட்டிலில் படுக்கின்றன. அதனால் அவர் நிலத்தில் பாய்விரித்துப் படுக்க மிருகங்கள் அவரைச் சுற்றிப் படுத்திருக்கின்றன. என்னைக் காணும்போது சொல்வார்; "இப்போ எனது குடும்பம் பல்கிப் பெருகிவிட்டது. குரங்கு குட்டி ஈன்றுள்ளது. புறாக்கள் பலவந்து சேர்ந்துள்ளன. பறவைகள் முன்பைவிட இரட்டிப்பாகிவிட்டன. நான் இப்போ விபரிக்க முடியாதளவு மகிழ்ச்சியில் இருக்கிறேன்" என்பார். மிகவும் துன்பத்தோடு வீதிகளில் குடித்துவிட்டு விழுந்த கிடந்த வீரவாகுவின் மனதுள்ச் சிவம் என்ற அன்பு புகுந்தமையால் அவர் துன்பப்படுவதில்லை,

ஆசைப்படுவதில்லை. சென்றவாரம் அவரது இனத்தவர் ஒருவர் காலமானார். அவர் அச்சாவீட்டுக்குச் செல்ல அக்கறைப்படவில்லை. இறந்தவனின் பிள்ளைகள் இவரைக் காணாது துக்கப்பட நான் தான் வந்து அவரை அழைத்துச் சென்றேன். மாலை ஐந்து மணியானதும், “எனது பிள்ளைகள் என்னைக் காணாவிட்டால் பெரும் துன்பப்படுவர்” என்று கூறி வந்துவிட்டார். வேப்பமர நிழலில் அவரை ஆவலோடு அவ்வுயிரினங்கள் காத்துக் கொண்டிருந்தன. ஓர் அன்பு உள்ளத்தில் புகுந்துவிட்டால் அதன் பிரகாசம் ஆசைகளை அழித்துவிடும். இவர் ஒருநாள் மது அருந்துவதற்காக மது விற்கும் கடைக்குச் சென்றபோது குரங்குகளும், ஆடுகளும், மான்களும் இவரின் பின்னால் சென்றன. மது விற்பவன் குரங்குகளைத் துரத்த, அவை பாய்ந்து மதுவிற்பவனைக் கடித்துக் குதறிவிட்டன. அதனால் வீரவாகுவைக் காவல்துறையினர் கைதுசெய்து கொண்டுபோக குரங்குகள் அவர்களையும் தாக்கின. அதனால் வீரவாகு மது குடிப்பதை விட்டுவிட்டார். இது எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. குரங்குகள் வீரவாகுவின்மீது கொண்ட அன்பு அவரின் ஆசைகளை அழித்ததுபோல சிவன்மீது வைக்கும் அன்பானது ஞானப் பிரகாசமாகி அவ் ஞானஇருளில் உருவெடுத்த ஆசைகளை அழிப்பது பெரிய காரியமல்ல” என்றார் கதிரேசன்.

**இன்பந் தருவன் குயிலே ஏழுல கும்முழு தாளி**
**அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்**
**நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்**
**கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய் 06**

“தாத்தா, கேட்கக் கேட்க மகிழ்வாக இருக்கு. அன்புதான் சிவம் என்று இன்றுதான் நான் அறிந்தேன். குயில் பாட்டைச் சொல்லுங்கள்” என்றாள் கவிதா.

“கவிதா, இன்பத்தைத் தருபவன் குயிலே. ஏழு உலகினர்க்கும் இன்பத்தை அளிப்பவனும் சிவன். அப்படியானவன் என்னைக் குதிரையில் வந்து ஆட்கொண்டவன். அப்படிப்பட்ட சிவனைப் போற்றிப் பகழ்ந்து கூறு” என்கிறார் மாணிக்கவாசகர். இவ்வளவு பெருமைகளை உடைய சிவன் மனிதர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பதற்காக மானிட வடிவத்தில் குருவாக வருகிறான். அதனாலும் அவனைப் போற்றிக் கூவு” என்கிறார். தன்மீது முழுமையான பற்றுள்ள பக்தர்களை ஆட்கொள்வதற்காகச் சிவன் தேவைக்கேற்றபடி வடிவமெடுப்பான். இது உங்களுக்குத் தெரியும். பன்றிக்குட்டிகளுக்குத் தாய்ப்பன்றியாகியவன். ஆணவம்மிக்க ஏமநாதனை வெல்ல விறகு வெட்டியாக வந்தவன்.

பாண்டியனுக்கருளச் சித்தராக வந்தவன். இவ்வாறு தன்னை விரும்பம் பக்தர்களுக்கருளச் சிவன் மானிட உருவெடுத்து வருவான். ‘‘ஒருநாள் வீரவாகு குடித்துவிட்டு பாதைமாறி வேறு திக்கில் சென்றுவிட்டார். அவர் வளர்த்த நாய் அவரைக் காணாது குரங்குடன் மோர்ந்து மோர்ந்து சென்றது. அவர் ஒரு பள்ளத்தில் விழுந்து கிடந்தார். குரங்கும் நாயும் வீதியால் சென்றவர்களை அழைத்து வந்து அவரைக் காப்பாற்றியது. பின் அவரை அவரது வீட்டுக்குக் கூட்டிச்சென்று விடியும்வரை அவரைப் பாதுகாத்தது. மறுநாள் அவர் குடிக்கச் சென்றபோது நாயும் குரங்கும் விடவில்லை. அவர் குடிக்கும் இடத்திற்குச் சென்று குடிக்க வந்தவர்களை இரண்டும் கடித்தன. மது விற்பவன் மதுவைக் கொடுத்தபோது அதனைப் பறித்து ஊத்தின. அதனால் மது விற்பனை செய்பவன் வீரவாகுவை வரவேண்டாம் என்று கூறிவிட்டான். அதனால்தான் வீரவாகு குடிப்பதை நிறுத்தினான். தன்னைத் திருத்தச் சிவன் நாயாகவும், குரங்காகவும் வந்தவன் என்று வீரவாகு சொல்வார். மறுநாள் மது விற்பனை செய்பவன் எனது வீட்டுக்கு வந்து தான் இனிமேல் மது விற்கமாட்டேன் என்று கூறிச் சென்றான். இதெல்லாம் சிவனது செயல். என்னைக் குடிக்காமல் செய்வதற்காகச் சிவன் மதுவிற்பவனை விற்காமல் செய்து ஆட்கொண்டவன் என்றும் வீரவாகு சொல்வான். சிவன்மீது அன்பு வைத்தால் சிவன் அன்பு வைத்தவருக்காகக் கீழிறங்கி வந்து ஆவன செய்வான்’’ என்றான் கதிரேசன்.

**உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்**

**பொன்னை அழிந்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்**

**மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய**

**தென்னவன் சேரவன் சோழன் சீரப்புயங் கன்வரக் கூவாய் 07**

“கவிதா, மாணிக்கவாசகர் சொல்கிறார், ‘‘குயிலே உன்னைப் புகழ்வேன். உனக்கு நல்ல நண்பனாவேன். குதிரைமேல் ஏறிவந்து என்னை ஆட்கொண்ட பொன்னை ஒத்தமேனியனும், மூவேந்தருக்கும் வேந்தனுமான சிவன் பாம்பைப்போல நெளிந்து நெளிந்து நடனமாடுவான். அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடு’’ என்கிறார் மாணிக்கவாசகர். சிவனின் மேலுள்ள அளவற்ற அன்புதான் மாணிக்கவாசகரைப் பாடச்சொல்லிக் கேட்கிறது. மனிதர்களானால் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். சொல்வதிலும் பயனில்லை. இங்கு மாணிக்கவாசகர் குயிலுக்குச் சொல்வதுபோல மனிதருக்குச் சிவனைப்பற்றிக் கூறுகிறார்’’ என்றார் கதிரேசன்.

**வாயிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி**

**ஓவியவ ருன்னி நிற்ப ஒண்தழல் விண்பிளந் தோங்கி**

**மேவிஅன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்**

**தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய் 08**

"குயிலே, திருமாலுடன் நான்முகனும் உன்னைத்தேடி அலையும்போது அவர்களது கண்களுக்கும், மனதிற்கும் அகப்படாத நீ சாதாரண மனிதனான என்னைக் குதிரைப்பாகனாக நேரில் வந்து ஆட்கொண்டாய். இது பெரும் புதுமையானது. உலகெங்கும் நிறைந்திருக்கின்ற உன்னை மாலும், அயனும் பிரபஞ்சம் முழுதும் தேடியலைந்தும் உன்னைக்காணவில்லை. ஓர் இடத்தில் இருந்த கொண்டு உன்னை நான் நினைத்தபோது வேகமாக ஓடும் குதிரைமீது ஏறி விரைந்து நான் இருக்கும் இடத்திற்கு தேடிவந்து என்னை ஆட்கொண்டமையை நான் விபரிக்க முடியாது திண்டாடுகிறேன். அழகிய இசைஞானமுடைய குயிலே இச் செய்தியை இனிமையாகப் பாடு என்று மாணிக்கவாசகர் கேட்கிறார்'' என்றார் கதிரேசன்.

**காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே**

**சீருடைச் செங்கமலத்தில் திகழுரு வாகிய செல்வன்**

**பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை யாண்ட**

**ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய் 09**

"கவிதா அடிமுடியைத் தேடிக் கண்டுகொள்ளாத தன்மை பக்தர்களுக்கு இல்லை. அத்தன்மை தூயமனமுடைய சிவனடியார்களின் மனதில் நித்தம் நிகழ்கிறது. அதை சிவனருளால் உணர்பவர்களுக்கு உலகப்பற்று ஒழிகிறது. அவர்கள் மரணமில்லாத பெருநிலையை அடைகின்றனர். மரணமில்லாப் பெருநிலை என்பது மீண்டும் பிறக்காத நிலை. அது சிவனது திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு இல்லை. வீரவாகு எப்பொழுதும் இறைவனைக் கேட்பது தனக்கு மரணத்தைத் தா என்று. அதை ஒருநாள் வீரவாகு எனக்குச் சொன்னபோது நான் அவருக்குச் சொன்னேன், "பிறவி எடுத்ததால்தான் துன்பங்கள் வருகின்றன. பிறவி இல்லாத நிலையைத்தேட வேண்டும். அது மரணமில்லாத நிலை. படைக்கப்பட்ட உயிர்களெல்லாம் ஏதோ ஒரு வகையில் எந்நேரமும் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆச்சிரமத்தில் நிற்கும் ஒரு நாய்க்குத்

திடீரென்று காலை இழுத்துவிட்டது. அது அக்காலைத் தூக்கியபடி நடக்கிறது. நீ நினைக்கிறாய் உனக்கு மட்டும்தான் துன்பம் என்று. இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து சீவராசிகளும் துன்பப்படுகின்றன. அதை ஏனையோர் உணர்வதில்லை. அதனால்தான் பெருந்துன்பப்படுகின்றனர். நீ மரணத்தை உடனடியாகத் தருமாறு வேண்டுகிறாய். செய்த பாவம் தீரவே மனிதப்பிறப்பு இறைவனால் கொடுக்கப்படுகிறது. அந்தப் பாவம் தீர்ந்தபிறகு மரணமடைந்தால்தான் பிறப்பில்லாதநிலை உண்டாகும். இல்லாவிட்டால் பிறந்து பிறந்து இறக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். இதை விலக்கும்படி சிவனை வேண்டு. இப்போ உனக்கு என்ன துன்பம் இருக்கோ அதை நீக்கச் சொல்லிப் பிரார்த்தனை செய். பாவங்களைச் செய்யாதே. மதுவருந்துவது பாவம். அது பலபாவச் செயல்களைச் செய்விக்கும். பழிவாங்கச் சொல்லும். சினத்தை உண்டாக்கும். இப்படிப் பலவும் நடைபெறும். அதனால் அன்பாக இரு. அன்பைக் கொடு என்று சொன்னபின்பு வீரவாகு அமைதியாகி விட்டான்'' என்றார் கதிரேசன்.

**கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேள்நீ**

**அந்தண னாகிவந்திங்கே அழகிய சேவடி காட்டி**

**எந்தம ராம்இவ னென்றிங் கென்னையும் ஆட்கொண்டருளும்**

**செந்தழல் போல்திரு மேனித் தேவர்பி ரான்வரக் கூவாய்**

"தாத்தா, தன்மீது அன்பு கொள்ளாதவர்களுக்குத் தன்னைக் காட்டாத சிவன் தன்மீது அன்பு கொண்டவர்களைத் தேடி வருவது எதற்காக'' என்று கேட்டாள் கவிதா.

''கவிதா, சோலையில் வாழும் மிருகங்களை நாம் பார்ப்பதோடு சரி. அவற்றின்மீது எல்லோரும் அன்பு செலுத்துவதில்லை. அதனால் அவை அன்பு செலுத்தாதவர்களைக் கவனிப்பதில்லை. நல்லைநாதன் ஆச்சிரமத்திற்கு வந்தால் குரங்குகள் ஆலமரத்தின்மீது ஏறி விளையாடும். கீழே சிவன் வீற்றிருப்பதால் நல்லைநாதன் ஆலமரத்தில் குரங்குகள் இருந்தால் அவற்றை வெருட்டிக் கலைத்து விடுவார். ஒருநாள் அவர் குரங்குகளைக் கலைக்கும்போது ஒரு குரங்கு கோபங்கொண்டு அவரைக் கடித்துவிட்டது. வீரவாகு குரங்குகளோடு விளையாடுவதால் அவை அவரைக் கண்டதும் மரத்தில் இருந்து இறங்கி வந்துவிடும். அவருக்குப் பின்னால் திரியும். இது அன்புப் பெருக்கு. மனிதரைப் பார். ஒருவர் சிரித்தால்தான் மற்றவர் சிரிப்பார். சிரிக்காவிட்டால் அவருக்குத் திமிர் என்று ஏசுவார். இவ்வாறுதான் இறைவனும் இருப்பார். தன்மீது அன்பு கொண்டவர்களைத் தேடிச் செல்வது. உயிர்களினது இயல்பு.

அதுபோலத் தன்மீது அன்பு கொண்டவர்களைத் தேடிச்செல்வதும்  இறைவனின் இயல்பு. அதனால்தான் மனிதர்கள் எந்நேரமும் இறைநினைவுடன் இருந்தால் இறைவனும் அவரின் நினைவாக இருப்பான். அதனால் அவருக்குத் துன்பம் வரவிடமாட்டான். மாணிக்கவாசகர் எந்நேரமும் சிவநினைவுடன் இருந்தமையால்தான் பாண்டிய அரசன் அவருக்குத் துன்பம் செய்தபோது இறைவன் பாண்டியனுக்குத் துன்பம் செய்தான். இது இயல்பான நிலை. இதை மாணிக்கவாசகர் மேல்நிலைப்படுத்திச் சொல்கிறார்'' என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.